திரு. வெ. கருணாமூர்த்தி : தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தை எந்த ஆண்டு அரசு துவங்குவதற்கு முயற்சி எடுக்கும் என்பதை அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொன்னேன். இந்தத் திட்டம் பரிசீலனையில் இருக்கின்றது. எவ்வளவு சீக்கிரம் முடியுமோ, அவ்வளவு சீக்கிரம் எடுத்துக் கொள்ளப்படும்.

கொட்டக்குடி ஆற்றின் குறுக்கே அணை.

*வினா எண். 861— திரு. பி. ராமதாஸ் : மாண்புமிகு வேளாண்மை-பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) போடியில் உள்ள கொட்டக்குடி ஆற்றின் நடுவே அணைக்கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது செயல்படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) போடியில் உள்ள கொட்டக்குடி ஆற்றின் குறுக்கே அணைக்கட்டும் திட்டம் தற்போது ஆய்வில் இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. ஒ. சுப்பிரமணியன் : போடிக்கு அருகே உள்ள கொட்டக்குடி ஆற்றிலிருந்து போடி நகருக்குக் குடிநீர் எடுக்கப்படுகிறது. அந்த அணைக்கட்டுத் திட்டம் உருவானால் குடிநீர்த் திட்டம் பாதிக்கப்படாதா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : இத் திட்டம் ஆய்வில் இல்லையென்றுதான் நான் பதில் சொன்னேன்.

திரு. வே. இரா. ஜெயராமன் : கொட்டக்குடி திட்டத்திற்குப் பதிலாக கொம்புத் தேக்கு திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிறதா ? இந்தத் திட்டமாவது ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு.......

1979 ஏப்ரல் 27]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக் கேள்வியை யொட்டிய துணைக் கேள்வியாக இருக்க வேண்டும் மற்ற வற்றுக்கு அமைச்சரிடத்தில் தகவல் இருக்காது.

வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

3. தகவல் கோரல்.

அ. ராஜா சுப்பிரமணியம் குழுவின் பரிந்துரைப்படி நெச வாளர்களுக்கு சட்டம் கொண்டு வருவது குறித்து.

திரு. ரா. உமாநாத் : இந்த அவை ஆரம்பத்திலே நெச வாளர்கள் மாநிலம் பூராவும் மறியல் செய்தபோது கனம் அமைச்சர் அவர்கள் ராஜா சுப்பிரமணியம் ரிப்போர்ட் அடிப் படையில் சட்டம் இண்ட்ரட்யூஸ் பண்ணப்படும் என்று சொன் னார்கள். நாளைக்கு சபை முடியப் போகிறது. இன்றுவரை மசோதா சர்குலேட் பண்ணப்படவில்லை. அமைச்சர் அவர்கள் தந்த வாக்குறுதியை நிறைவேற்றுவார்களா ?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : ராஜா சுப்பிர மணியம் கமிட்டி அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு வரைவு மசோதா தயாரிக்கப்பட்டு மாண்புமிகு முதலமைச்சர் தொழிலாளர் நல அமைச்சர், பஞ்சாலைத்துறை அமைச்சர் ஒப்புதல் பெற்று உறுப்பினர்களுக்குக் கொடுப்பதற்காக அனுப் பப்பட்டிருக்கிறது. நாளைக்கு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் அதை மொழிவார்கள்.

ஆ. விவசாயிகள் கைது செய்யப் பெற்றுள்ளது குறித்து.

திரு. சோ. அழகர்சாமி : தொடர்ந்து விவசாயிகள் கிளர்ச்சியை ஒட்டி இப்போது பல இடங்களில போலீஸ் கைது செய்துகொண்டே இருப்பதாகத் தகவல வந்திருக்கிறது. இதுவரை எத்தனை இடங்களில் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் ? அமைச்சர் அவர்கள் அதுபற்றி 82-வது விதியின் கீழ் ஒரு அறிக்கை வைத்தால் பூராவுமாக அதைப்பற்றி உணர்ந்து கொள்ள முடியும்.

திரு. ஜே. ஜேம்ஸ் : விவசாயிகள் போராட்டம் சம்பந்தமாக கைது செய்யப்பட்டு........